அனுப்புநர்
டாக்டர்.பு.உமாநாத், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
கோயம்புத்தூர்

பெறுநர்
மாவட்ட வன அலுவலர்,
கோயம்புத்தூர் கோட்டம்,
கோயம்புத்தூர்–641 043

ந.க.3667/2011/ஆ4 நாள் 29.04.2011

அய்யா,

பொருள் .. நிலம் – நிலஉரிமை மாற்றம் – கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம் – 110/22 – 11 கே.வி. சோமையம்பாளையம் துணை மின் நிலையம் அமைத்தல் – கணுவாய் மலை மற்றும் போளுவம்பட்டி பிளாக் III – ஒதுக்கு காடுகள் வழியாக 950 மீட்டர் நீளத்திற்க 110 கே.வி. மின்தடம் (line) கொண்டு செல்லல் – மேற்படி ஒதுக்கு காடுகள் நிலத்திற்கு (2.09.0 ஹெக்.) ஈடாக கோயம்புத்தூர் (தெற்கு) வட்டம் – தென்கரை கிராமம் – க.ச.எண்.499 அரசு புறம்போக்கு காலையில் 4.18.0 ஹெக். நிலம் – நிலமாற்றம் செய்தல் – தொடர்பாக.

பார்வை .. 1. கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் கடித எண்.டி1/1/2010 நாள் 21.01.2010
2. தமிழ்நாடு மின்சாரவாரிய கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் (வடக்கு) மேற்பார்வை பொறியாளர் கடித எண். SE/CEDC/M/AEEGL/AE GLI/F/SMPSS/D.No.140-11 நாள் 25.01.2011

---------

பார்வையில் காணும் கடிதங்களின் மீது கவனம் ஈர்க்கப்படுகிறது.

கோயம்புத்தூர் (வடக்கு) வட்டம், சோமையம்பாளையம் கிராமத்தில், 110/22–111 k.v. சோமையம்பாளையம் துணை மின்நிலையம் அமைக்க கணுவாய் மலை, தடாகம் மற்றும் போளுவம்பட்டி பிளாக்–III ஒதுக்கு காடுகள் வழியாக 950 மீட்டர் நீளத்திற்கு 110 கே.வி. மின்தடம் (line) கொண்டு செல்ல தேவைப்படும் 2.09.0 ஹெக். ஒதுக்கு காடுகள் நிலத்திற்கு ஈடாக இரண்டு மடங்கு 4.18.0 ஹெக். புறம்போக்கு நிலம் வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய பார்வை 1–ல் காண் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

பார்வை 2–ல் காண் கடிதத்தில் தமிழ்நாடு மின்சார வாரிய கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் (வடக்கு) மேற்பார்வை பொறியாளர், TANGEDCO, த.போது போதிய நிதி ஆதாரமின்றி இருப்பதால், மேற்படி வனத்துறை ஈடாக கோரியுள்ள 4.18.0 ஹெக். புறம்போக்கு நிலத்தினை நிலக் கிரயத்தொகை இன்றி (இலவசமாக) வனத்துறைக்கு வழங்கிட கோரியுள்ளார்.

இந்நிலையில் சோமையம்பாளையம் துணை மின் நிலையம் அமைக்க மின்வாரியத்தால் சோமையம்பாளையம் கிராமத்தில் கோரப்பட்டுள்ள 2.09.0 ஹெக். ஒதுக்க காடுகள் நிலத்திற்கு ஈடாக, கோயம்புத்தூர் தெற்கு வட்டம், தென்கரை கிராமம், க.ச.எண்.499/1 அரசு புறம்போக்கு காலையில் 4.18.0 ஹெக். நிலம் வனத்துறைக்கு நிலமாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– பு. உமாநாத்,
மாவட்ட ஆட்சியர்,
கோயம்புத்தூர்

நகல் .. மேற்பார்வை பொறியாளர், கோயம்புத்தூர் மின்பகிர்மான வட்டம் (வடக்கு), தமிழ்நாடு மின்சார வாரியம், கோயம்புத்தூர்–641 012

நகல் .. வட்டாட்சியர், கோயம்புத்தூர் (தெற்கு)
– மேற்படி நிலமாற்ற முன்மொழிவுகளை தயார் செய்து வருவாய் கோட்டாட்சியர் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்

நகல் .. வருவாய் கோட்டாட்சியர், கோயம்புத்தூர்

/உத்தரவுப்படி/

3/5/11
மாவட்ட ஆட்சியருக்காக

3/5/11

Colec - certificate - II